மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 298, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

298—

மாணவர் விடுதி

*43208—**திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரி மாணவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரியில் சுமார் 1,136 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதனருகில் விடுதிகள் ஏதுமில்லை. எனவே, இப்பகுதியில் கல்லூரி மாணவர் விடுதியைத் துவங்குவதற்கான தேவை மற்றும் சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும்

2014 ஜூலை 31]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டம், 2023 கொண்டுவந்து தமிழகத்திலுள்ள அனைத்துத் துறைகளையும் முதன்மைத் துறைகளாக மாற்றிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் துறையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் மாபெரும் புரட்சியைச் செய்திருக்கின்றார்கள். மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதிக்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துக் கொடுத்தார்கள். அந்தக் கல்லூரியில் இன்றைக்கு 428 மாணவர்களும், 908 மாணவிகளும் பயின்று வருகின்றனர். அதில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் 166 பேரும், மாணவிகள் 342 பேரும் பயின்று வருகின்றார்கள். இக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள் அனைவரும் சாதாரண, சாமானிய கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகள் ஆவார்கள். எனவே அவர்களுடைய நிலையினைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாணவர்களுக்கு விடுதி அமைத்துத் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்த ஆண்டே அந்த விடுதி கட்டிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.